# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ).,**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண். 188/ந/2025, நாள் 02.07.2026</u>

| | | |
|---|---|---|
| அ. நடராஜன்,<br>பழநி, திண்டுக்கல் மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>பழநி நகராட்சி, திண்டுக்கல் மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

திண்டுக்கல் மாவட்டம், பழநி, லட்சுமிபுரம், மகாலட்சுமி கோவில் தெரு, எண்.22/230டி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. நடராஜன் என்பவரது 02.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2025 அன்று பெறப்பட்டு, 188/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், பழநி, லட்சுமிபுரம், மகாலட்சுமி கோவில் தெரு, எண்.22/230டி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. நடராஜன் என்பவரின் 02.06.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

" 1)

1. நான் பழநி நகராட்சியில் 05.06.1993 முதல் 31.10.2003 வரையிலும் வருவாய் ஆய்வராகவும், உதவியாளராகவும் பணிபுரிந்துள்ளேன்.
2. எனக்கு 01.04.1999 முதல் 31.10.2003 வரையிலான 1999-2000 முதல் 2003-2004 வரைக்கான நிதி ஆண்டுகளுக்கு மட்டும் பகுதி வட்டித் தொகையாக பழநி நகராட்சியின் கடிதம் ந.க. எண். 5605/2015/பி2, நாள் 28.04.2016–ன்படி காசோலையாக ரூ.5508/- மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.
3. இதன்படி 05.06.1993 முதல் 31.03.1999 வரையில் 1993-1994 முதல் 1998-1999 வரையில் உள்ள நிதி ஆண்டுகளில் பழநி நகராட்சியில் நான் பணிபுரிந்து எனது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டிருந்த சேமநலநிதிக்கான வட்டித் தொகைகள் இன்னமும் எனக்கு வழங்கப்படாமல் உள்ளது.

2)

1. எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள், பழநி நகராட்சியில் 08.06.1993 முதல் 02.11.2006 வரையில் உதவியாளராகவும், வருவாய் ஆய்வராகவும் மற்றும் 25.09.2007 முதல் 04.03.2010 வரையில் கணக்கராகவும் பணிபுரிந்துள்ளார்.
2. எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாளுக்கும், பழநி நகராட்சியின் கடிதம் ந.க.எண். 5605/2015/பி2, நாள் 28.04.2016–ன்படி 01.04.1999 முதல் 02.11.2006 வரையிலான பகுதி காலங்களான 1999-2000 முதல் 2006-2007 முடிய உள்ள நிதி ஆண்டுகளுக்கு மட்டும் பகுதி வட்டித் தொகையாக ரூ.4890/- மட்டும் காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது.
3. இதன்படி எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் 08.06.1993 முதல் 31.03.1999 வரையிலான 1993-1994 முதல் 1998-1999 நிதி ஆண்டுகள் வரையில் பழநி நகராட்சியில் பணிபுரிந்த காலங்களுக்கும்,
4. 25.09.2007 முதல் 04.03.2010 வரையில் பணிபுரிந்துள்ள 2007-2008 முதல் 2009–2010 வரையிலான நிதி ஆண்டுகளுக்கும் சேமநல நிதிக்கான வட்டித் தொகைகள் இன்னமுமே அவருக்கு வழங்கப்படாமல் உள்ளது.

எனது இடது கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை செய்துள்ள நிலையிலும் மற்றும் நானும் எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் இருவரும் சர்க்கரை நீரழிவு நோய் மற்றும் இதர உடல் நலக்குறைவால் பாதிப்பில் இருந்து வரும் நிலையிலும், தொலைதூர பயணங்கள் செய்ய முடியாத சூழ்நிலையில் 72 வயதுடைய மூத்த குடிமக்கள் ஆக உள்ளோம்.

எங்களுக்கு பழநி நகராட்சி நிர்வாகம் தரவேண்டியுள்ள மீதம் (Balance) சேமநல நிதிக்கான வட்டித் தொகைகளை படிவம் I-ன்படியான ஆவண நகல்களின் அடிப்படையிலும், விபரங்களின்படியும் தாங்கள் தக்கவாறு பரிவோடு ஆராய்ந்து மேற்கண்டவாறுள்ளபடி சேமநல நிதிக்கான வட்டித் தொகைகள் எங்கள் இருவருக்கும் கிடைக்கும்படியாக ஆவண செய்து உதவிடுமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.''.

2) முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பழநி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை கிடைக்கப்பெறவில்லை.

4) எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையர் ஆகியோரை 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5) மனுதாரர் 16.11.2025 நாளிட்ட கடிதத்தில் தனது முறையீட்டு மனு மீது நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக ஆணையிட்டதற்கு நன்றியை தெரிவித்து, தனது இடது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்துள்ளதாலும், உடல் உபாதைகள் உள்ளதாலும், தொடர் சிகிச்சை பெற்று வருவதால் நீண்ட தூர பயணத்தை மேற்கொள்ள இயலாது என்பதால், மேற்படி விசாரணயில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6) எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 26.11.2025–ல் தேர்தல் ஆணையத்தின் கடித எண். 5000/Ele-1/2025-27, நாள் 31.10.2025 உத்திரவின்படி திண்டுக்கல் மாவட்டம், பழநி சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பான பணிகளை விரைவாக முடிக்க வேண்டியுள்ளதால், 27.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையை வேறொரு தேதிக்கு மாற்றி தர கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் –

“திரு. அ. நடராஜன் என்பவருக்கு சேமநலநிதி பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதில், கீழ்க்கண்டவாறு சேமநலநிதி பதிவேட்டில் வட்டி தொகை உள்ளது.

1. திரு. அ. நடராஜன் (ஓய்வு) பிரதி மாதம்- ரூ.1,000 வீதம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. 1993–1994 முதல் 1998–1999 வரை (1000 x 12 = 12000/–) மற்றும் 12% வட்டி ரூ.1440 x 6 வருடம் = ரூ.8640/-.

2. திருமதி கி. லலிதாம்பாள் (ஓய்வு) பிரதி மாதம் ரூ.1,000/– வீதம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. 2007-2008 முதல் 2010–2011 வரை (1000 x 12 = 12000/–) மற்றும் 8.5% வட்டி ரூ. 1020 x 4 வருடம் = 4080/-

   ஏற்கெனவே (1993-94 முதல் 1998 - 1999 வரைக்கும்) வழங்கப்பட்ட தொகை நீங்கலாக நிலுவையிலுள்ள தொகை ரூ.1,942/-ஐ சேர்த்து மொத்தம் (4080+1942) = ரூ.6022/-.

மேற்கண்டவாறு உள்ள ஓய்வு பெற்ற பணியாளர் திரு. அ. நடராஜன் அவர்களுக்கு சேமநல நிதி வட்டி தொகை ரூ.8640/-க்கான IOB வங்கி காசோலை எண். 605181, நாள் 25.11.2025 மற்றும் அன்னாரது மனைவி ஒய்வு பெற்ற பணியாளர் திருமதி கி. லலிதாம்பாள் ரூ.6022/-க்கான IOB வங்கி காசோலை எண். 605182, நாள் 25.11.2025 மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. காசோலை வழங்கப்பட்டதற்கான ஒப்புகை பெறப்பட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளது.''. என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் 26.11.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“With reference to my request petition dated 02.06.2025 and order of the Hon'ble Secretary/ Ombudsman, Chennai-32, letter No. 188/M/2025, dated 10.11.2025 to conducting the inquiry dated 27.11.2025 at Government Travellers Bungalow, Coimbatore, I submit that the Municipal Commissioner, Palani Municipality has been settled the remaining balance service period / Balance

amount of Provident fund Interest Amount Rs.8640/- for the financial year 1993-1994 to 1998 – 1999 to me, and Rs.6022/- for the Financial years from 1993-1994 to 1988 – 1999 and from 2007 – 2008 to 2009-2010 to my wife Tmt. K. Lalithambal, as per the Municipal Commissioner letter ROC No.625/2025/B2, dated 25.11.2025 has been fully settled.

Hence, I kindly request to the Hon'ble Secretary of OMBUDSMAN, Chennai-32, No further action need relating to his matter and No inquiry need, to be held on 27.11.2025 at 11.10 A.M. at Government Travellers Bungalow, Coimbatore.

I am also submit that in this circumstances, I also inform to you Sir, I would not attend the inquiry as per order of OMBUDSMAN, Chennai-32 dt. 10.11.2025.

And I also request the Secretary Hon'ble OMBUDSMAN, Chennai-32, My petition dt. 05.06.2025 may also be lodged without further action for the same.

Since my request of above matter has been fully settled and problem also was solved.

Detailed letter / Application will be sent separately.".

7) இந்நிலையில், எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 625/2025/பி2, நாள் 26.11.2025–ல் தேர்தல் ஆணையத்தின் கடித எண். 5000/Ele-1/2025-27, நாள் 31.10.2025 நாளிட்ட உத்திரவின்படி திண்டுக்கல் மாவட்டம், பழநி சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பான பணிகளை விரைவாக முடிக்க வேண்டியுள்ளதால், 27.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு பழநி நகராட்சி வருவாய் அலுவலர் திரு. ச. சுப்பிரமணியன் என்பவரை ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நகராட்சி வருவாய் அலுவலர் திரு. ச. சுப்பிரமணியன் என்பவர் 27.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திரு. அ. நடராஜன் அவர்களுக்கு சேமநலநிதி வட்டி தொகை ரூ.8640/-க்கான IOB வங்கி காசோலை எண். 605181, நாள் 25.11.2025 மற்றும் அன்னாரது மனைவி ஓய்வு பெற்ற பணியாளர் திருமதி கி. லலிதாம்பாள் அவர்களுக்கு ரூ.6022/-க்கான IOB வங்கி காசோலை எண். 605182, நாள் 25.11.2025ம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற விபரம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காசோலை வழங்கப்பட்டதற்கான ஒப்புகை பெறப்பட்ட நகல் இணைக்கப்பட்டுள்ளது.".

9) மனுதாரர் ஏற்கனவே 26.11.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு எதிரான அறிக்கையினை மனுதாரர் தனது 27.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

" (1) எனக்கு, பழநி நகராட்சியில் பணிபுரிந்த காலங்களுக்கான 05.06.1993 முதல் 31.03.1999 வரையிலான 1993-1994 முதல் 1998-1999 வரையிலான நிதியாண்டுகளுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த சேமநல நிதிக்கான வட்டித் தொகை ரூ.8640/-ம் ,

(2) எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாளுக்கு, அவர் பழநி நகராட்சியில் பணிபுரிந்த காலங்களான 08.06.1993 முதல் 31.03.1999 வரையிலான 1993-1994 முதல் 1998–1999 வரையிலான நிதயாண்டுகளுக்கு, பழநி நகராட்சியில் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த ரூ.1942/-ம் 25.09.2007 முதல் 04.03.2010 வரையிலான 2007-2008 முதல் 2009-2010 வரைக்கான நிதியாண்டுகளுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த சேமநலநிதிக்கான வட்டித் தொகை ரூ.4080/-ம் எனக்கணக்கிட்டு ஆகமொத்தம் ரூ.6022/-ம் பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 625/2025/பி2, நாள் 25.11.2025-த்துடன் இரண்டு காசோலைகள் இந்நகராட்சி மேலாளர் (பொறுப்பு) அவர்கள் நேரில் எனது இல்லத்திற்கு வந்து எனது மற்றும் எனது மனைவி கி. லலிதாம்பாள் இருவரிடமும் உரியவாறு கையொப்பம் பெற்று வழங்கி சென்றார்கள்.

இதனைத் தொடர்ந்து, 27.11.2025ம் தேதியன்று காலை 11.00 மணியளவில், கோயம்புத்தூர், அரசு விருந்தினர் மாளிகையில் நடக்க இருந்த விசாரணை அழைப்பு ஆணையினை கருத்திற்கொண்டு, அதில் நான் கலந்து கொள்ள முடியாததொரு சூழ்நிலையாலும், பழநி நகராட்சியில், எங்கள் இருவருக்கும், நாங்கள் இருவரும் பழநி நகராட்சியில் பணிபுரிந்து விடுபட்ட பணிக்காலங்களுக்கு வழங்கப்பட்டதற்கான சேமநல நிதித் தொகைகள்,

உரியவாறு உடனடியாக சரிபார்க்க முடியாததொரு அவசரகதியில் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாக / எண்ணி கருதி, தவறுதலாக மேன்மைமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை-32, செயலாளர் அவர்களுக்கு எனது 26.11.2025ம் தேதிய, கையொப்பமிடாத மற்றும் கையொப்பமிட்ட 'E-Mail' அறிக்கை கொடுக்கவேண்டிய நிலைக்கு மிகவும் வயதான நிலையில் (ஆராய்ந்து அறிந்திடாமல்) தள்ளப்பட்டுவிட்டேன்.

இதற்கான மிக்க வருத்தத்தையும், மன்னிப்பையும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இதன் பின்னர், இன்றைய நாள் (27.11.2025) பழநி நகராட்சியில் எங்களது பணிக்காலங்களில், மேற்குறிப்பிடப்பட்ட காலங்களில் எங்களது ஊதியத்தில் பிடித்தம் செய்திருந்த விவரங்களை சரிபார்த்ததில் ஒரு சில விபரங்களின்படி எனது மனைவிக்கு சேமநல பிடித்தமாக ஜூலை 2009ம் மாதம் வரையில் மாதம் ரூ. 4000/– வீதமும், ஆகஸ்ட் 2009 முதல் பிப்ரவரி 2010 வரையில் மாதம் ரூ.7000/– வீதமும் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. 01.03.2009 முதல் 28.02.2010 வரைக்கான வருமான வரிக்கான கணக்கு படிவங்களில் உள்ளது.

இதுதவிர, எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கள் பழநி நகராட்சியிலிருந்து தஞ்சாவூர் நகராட்சிக்கு வருவாய் அலுவலராக பதவி உயர்வில் சென்ற நிலையில் அதற்கான முன் ஊதியச் சான்றிதழில், Last Pay Certificate-ன் படி மார்ச் 2010ல் (அதாவது பிப்ரவரி 2010 வரை பிடித்தம் செய்யப்பட்டதின் அடிப்படையில்) சேமநல நிதிக்கான பிடித்தம் ரூ.7000/- செய்யப்பட வேண்டும் என்றும், தஞ்சாவூர் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிவைத்த கடிதத்துடன் ந.க. எண். சி.1/593/2010, நாள் 24.03.2010-ன்படி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக உள்ள நிலையில் பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 625/2025/பி2, நாள் 25.11.2025ல் கணக்கிடப்பட்டுள்ள விபரங்களில், எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாளுக்கு பிரதிமாதம் ரூ.1000/- சேமநல நிதிக்காக பிடித்தம் என தவறுதலாக குறிப்பிட்டு, அதன்படி கணக்கிட்டு ரூ.4080/- என தெரிவிக்கப்பட்டுள்ளதில் குறைபாடுகளும் / குளறுபடிகளும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், எனக்கு மாதம் ரூ.1000/- வீதம் பிடித்தம் என கணக்கிட்டுள்ளதினை, சரிபார்க்கவும் வேண்டியுள்ளது. அதாவது பழைய/முந்தைய காலங்களான 1993-1994 முதல் 1998-1999 வரைக்குமான எனது வசம் உள்ள பழைய ஊதிய விபர ஆவணங்களையும் சரிபார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறாக (1) எனது மனைவிக்கு கிடைத்த அளவிலான 2009-2010ம் ஆண்டிற்கான ஊதிய விபர அடிப்படையில் சேமநல நிதிக்கான பிடித்தங்களில் பழநி நகராட்சி ஆணையர் கடிதத்தின் கணக்கீட்டு விபரப்படியும், எங்கள் வசம் உள்ள ஆவணங்களின்படியும் பெரிய அளவில் வித்தியாசம் உள்ளன.

இதே நிலையில், எனக்குமான ஊதிய விபர பழைய ஆவணங்களை எங்கள் வசம் உள்ளதை சரிபார்க்கவும் வேண்டியுள்ளது.

இந்த நிலையில் பழநி நகராட்சியில் எங்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த பணிக்காலங்களான (1) எனக்கு 1993-1994 முதல் 1998-1999 வரையிலான நிதியாண்டுகளுக்கும்,

(2) எனது மனைவி கி. லலிதாம்பாள் அவருக்கும் நிலுவையில் இருந்த பணிக்காலங்களான 1993–1994 முதல் 1998-1999 வரையிலான நிதியாண்டுகளுக்கும், 2007-2008 முதல் 2009-2010 வரையிலான நிதியாண்டுகளுக்கும் சேமநல நிதிக்கான வட்டித் தொகைகள் வழங்கப்பட்டதில் முழுமையான நிதியாண்டுகள் நிறைவடைந்துவிட்டது என்றாலும், இந்த ஆண்டுகளுக்கான எங்களது ஊதியத்தில் பிடித்தம் செய்ததில் பழநி நகராட்சி ஆணையர் அவர்களது கடிதத்தில் உள்ளதிற்கும், எங்களிடம் (பழைமையில்) உள்ள ஆவணங்களின்படியும், வித்தியாசம் உள்ளது என்பதால் பிடித்தத் தொகை விபரங்களின்படி/முழுமை பெறாத நிறைவடையாததொரு திருப்தியற்ற நிலையினை தற்போது எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முழுமையாக எங்களின் கைவசம் உள்ள ஆவணங்களை சரிபார்த்து உரிய ஆதாரங்களுடன், பழநி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு மீளவும் முழுமையாக "Claim" கோரிக்கை செய்ய உள்ளோம்.

அதன் விவரங்களை விரைவாக / அறிக்கையாக தங்களுக்கு சமர்ப்பிக்கவும் உள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவில் எங்களுக்கு சேமநல நிதிக்கான வட்டித் தொகைகள் கிடைக்கச் செய்தமைக்கு பெருமளவில் நன்றியினை பணிவுடன் தெரிவிக்கின்றேன்.''.

10) மேலும், மனுதாரர் 10.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

02.06.2025ம் தேதிய எனது முறையீட்டு மனுவிற்கு பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 25.11.2025–ன்படி 1993-1994 முதல் 1998-1999 வரையிலான நிதி ஆண்டுகளுக்கு எனக்கு வழங்கப்பட வேண்டியிருந்த சேமநல நிதிக்கான நிலுவைத் தொகை ரூ.8640/-க்கு வரப்பெற்ற காசோலையினை நான் பெற்றுக்கொண்டதில் எந்தக் குறைபாடுகளும் எனக்கு ஏற்படவில்லை. இதில் முழுமையான திருப்தியினை நான் அடையப்பெற்றுள்ளேன் எனப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவருக்கு 2007-2008 முதல் 2009-2010 வரையில் வழங்கப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகை கணக்கிடப்பட்டதில், சேமநலநிதிக்கான மாத சந்தாத் தொகையினை அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்துள்ளபடி இல்லாமல், மாறாக ஏதோ ஒரு தொகையாக ரூ.1,000/- வீதம் மாதாமாதம் பிடித்தம் என தவறாகவும், குறைவாகவும் கணக்கிடப்பட்டு அவருக்கு மேற்கண்ட நிதி ஆண்டுகளுக்கும், கூடுதலாக 2010-2011 (அவர் பழநி நகராட்சியில் பணிபுரியாத காலங்கள்) ஒரு நிதி ஆண்டுக்கும் சேர்த்து ரூ.4080/-என கணக்கிட்டும், 1993-1994 முதல் 1998-1999 வரைக்கான நிலுவை வட்டித் தொகை ரூ.1942/-னை சேர்த்து ரூ.6022/- காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட தொகையில் 2007-2008 முதல் 2009-2010 வரையிலான நிதியாண்டுகளுக்கு கணக்கிடப்பட்டதில் பெருங்குறைபாடுகள் உள்ளதினை, பழைய எங்கள் வசம் இருந்த, ஊதியம் பெற்ற விவரங்களைக் கொண்டு தற்போது கண்டறிய முடிந்தது.

அதன்படி, எனது மனைவி, கி. லலிதாம்பாள் ஆகிய அவருக்கு 2007-2008 முதல் 2009-2010 வரையிலான, காலங்களில் அவர் பழநி நகராட்சியில் பணிபுரிந்தபோது அவரது ஊதியத்தில், சேமநலநிதிக்காக மாதாமாதம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள சந்தாத் தொகை விவரப்பட்டியலுடன் கணக்கீட்டுத்தாள் ஒன்று தயார் செய்து பழநி நகராட்சி ஆணையருக்கு எனது மனைவி மூலம், 10.12.2025ம் தேதியிட்ட கோரிக்கை மனு ஒன்று "Speed Post"-ல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விவரங்களை, பழநி நகராட்சியின் வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் பொறுப்பில் உள்ள அலுவலருக்கும் "WhatsApp" மூலம் விபரம் அளிக்கப்பட்டும் கடந்த 08.12.2025ல் கைபேசிமூலம் விபரம் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுநாள் வரையில் எனது மனைவிக்கு 2007-2008 முதல் 2009-2010 வரையில் கணக்கராக, பழநி நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் அவரது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட உண்மையான சேமநல நிதிக்கான, சந்தாத் தொகைக்கு மாறாக குறைவாக சந்தாத் தொகை ஏதோ வகையில் எடுத்து கணக்கிட்டு வழங்கப்பட்டுள்ள வகையில் இன்னமும் பழநி நகராட்சி நிர்வாகமானது ரூ.7599/- வழங்கும்படியாக உள்ளது.

இதனால் எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் திருப்தியடையாதொரு குறைபாடுகளுடன்தான் இருந்து வருகிறார்.

இவ்வாறான நிலையில், பழநி நகராட்சி நிர்வாகம், எனது மனைவி கி. லலிதாம்பாள், அவர்கட்கு ரூ.7599/- வித்தியாச வட்டித் தொகை வழங்கப்பட்டால் ஒழிய, எங்களது கோரிக்கை முழுமை பெறாமல்/திருப்தியற்றதாகவே இருக்கமுடியும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது கோரிக்கையின்படி, எனது மனைவிக்கு, பழநி நகராட்சி நிர்வாகம் மீதம் வித்தியாசத் தொகையாக ரூ.7599/- வழங்கப்பட்ட உடன் மேன்மைமிகு செயலாளர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு, உரியவாறு உடனடியாக முழுமையான திருப்தியுடன் கூடிய அறிக்கையினை பணிந்தனுப்புகின்றேன் என மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

11) மனுதாரரின் தொடர் கடிதங்கள் மற்றும் எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் 26.11.2025 நாளிட்ட கடிதம் ஆகியவற்றினைத் தொடர்ந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 17.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

12) மனுதாரரின் 07.02.2026 நாளிட்ட கடிதத்தில் வயது முதிர்வு காரணமாக தொலைதூர பயணம் மேற்கொள்ள இயலாததால் 17.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராவதில் விலக்களிக்குமாறும், தனது மனுவினை பரிவோடு ஆராய்ந்து உரிய உத்தரவு வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் கடிதத்தில் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"(1) எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள், கணக்கராக பழநி நகராட்சியில் பணிபுரிந்தபோது, சேமநல நிதிக்கான மாத சந்தாத் தொகை பிடித்தம் குறித்தான எங்களது வசமுள்ள அக்டோபர் 2007 முதல் பிப்ரவரி 2010 வரையிலான Pay Drawn Particulars குறித்தான பதிவேடு நகல்களையும்,

(2) பழநி நகராட்சி நிர்வாகம் மூலம் கம்யூட்டர் மூலம் அச்சிடப்பட்டு வழங்கியுள்ள சம்பளச் சீட்டு நகல்களை அக்டோபர் 2007 முதல் ஜனவரி 2010 (கிடைத்தளவில் உள்ளவைகள்) நகல்களையும், எனது மனு நாள் 10.12.2025 நகல் மற்றும் பழநி நகராட்சி ஆணையருக்கு எனது மனைவி கி. லலிதாம்பாள், அனுப்பியுள்ள கோரிக்கை மனு நாள் 10.12.2025 மனுவின் கோரிக்கை மனுவுடன் கூடிய Difference Rs.7599/- வழங்குவது குறித்தான "Working statement" (sets) நகல் யாவையினையும் தங்களது மேலான பார்வைக்கும், பரிசீலனைக்கும், எங்களது வசம் உள்ள ஆவணங்களாக தங்களுக்கு பணிவுடன் சமர்பித்துக்கொள்கிறேன்.

மேன்மைமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், செயலாளர் அவர்கள் தயவு கூர்ந்து இவைகளை பரிவோடு ஆராய்ந்து அதன்வழி/அதன்படி முடிவெடுக்குமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.".

13) எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 17.02.2026–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராக நகராட்சி வருவாய் அலுவலர் திரு. ச. சுப்பிரமணியன் என்பவரை கேட்டுக்கொள்ளப்பட்ட நிலையில், விசாரணை கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறுவதாக தவறுதலாக கருதி நகராட்சி வருவாய் அலுவலர் 17.02.2026 அன்று விருந்தினர் மாளிகை, கோயம்புத்தூர் சென்றுவிட்டதால், விசாரணையை வேறொரு தேதிக்கு ஒதுக்கீடு செய்து தர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 17.02.2026–ல் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பழநி நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி கி. லலிதாம்பாள், க/பெ. திரு. அ. நடராஜன் என்பவருக்கு சேமநலநிதி நிலுவைத் தொகைக்கு வட்டி வழங்குவது தொடர்பாக நகராட்சியிலுள்ள சேமநல நிதி பதிவேடு 2007-08 முதல் 04.03.2010 வரை உள்ள காலத்திற்கு பதிவேட்டில் நிலுவையில் உள்ள இருப்புத் தொகை மொத்தம் ரூ.10,644/- அதில் கீழ்க்கண்ட விவரப்படி அன்னாருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.".

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | காசோலை எண் | நாள் | வழங்கப்பட்ட தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி கி. லலிதாம்பாள், க/பெ. திரு. அ. நடராஜன், கணக்கர் | 2007 – 08 Voucher No.240 | 12.10.2007 | 3,548 |
| 2 | | 2025 – 26 IOB வங்கி காசோலை எண். 605182 | 25.11.2025 | 6,022 |
| 3 | | 2025 – 26 IOB வங்கி காசோலை எண். 605059 | 16.02.2026 | 1,074 |
| மொத்தம் | | | | 10,644/- |

15) எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 17.02.2026–ல் கேட்டுக்கொண்டதை ஏற்று 10.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டு, மனுதாரருக்கு நகலிடப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

16) மனுதாரரின் 01.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் –

"விசாரணைக்கு நான் வர இயலாத நிலையில் உள்ளதால், இந்த விசாரணைக்கு தேவையான விபரங்களை, பழநி நகராட்சி ஆணையரின் 25.11.2025 மற்றும் 16.02.2026 நாளிட்ட கடிதங்கள் ந.க.எண். 625/2025/பி2 –ல் காணும் கடிதங்களின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு தங்களது மேலான நடவடிக்கைகளுக்காக / உத்திரவிற்காகபணிவுடன் சமர்பித்துக்கொள்கிறேன்.

1. பழநி நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 25.11.2025 மற்றும் 16.02.2026ல் கண்டுள்ளபடி ரூ. 6022/– காசேலையாக

   (1) 1993-94 முதல் 1998-1999 வரைக்கான முந்தைய காலங்களுக்குரிய வட்டித் தொகையாக ரூ.1942/-யும்.

   (2) 2007-2008 முதல் 2010-2011 வரைக்கும், உண்மைக்கு மாறாக சேமநல நிதி மாத சந்தா ரூ.1000/- வீதம் பிடித்தம் என எடுத்துக்கொண்டு தப்பாக ரூ.1000x12=12000 x 8.5% வட்டியாக ரூ.4080/-யும் சேர்த்தே 1942 + 4080 = ரூ.6022/- வரப்பெற்றது.

   இதுகுறித்து பழநி நகராட்சி ஆணையருக்கு உண்மையான சேமநலநிதி சந்தா தொகை பிடித்தங்கள் (மாதம் வாரியாக) குறித்தான விபரங்கள் கொண்ட எங்கள் வசம் இருந்த பதிவு ஆதாரங்கள் மற்றும் பழநி நகராட்சியின் மூலம் தரப்பட்டிருந்த சம்பளச்சீட்டு நகல் யாவையும் அனுப்பியுள்ளோம்.

   பழநி நகராட்சி ஆணையரது மேற்கண்ட கடிதத்தின்படி, பொய்யான மற்றும் உண்மைக்கு மாறான வகையில், விபரங்கள், பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பழநி நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 25.11.2025 மற்றும் 16.02.2026ல் கண்டுள்ளபடி 16.02.2026ம் தேதிய கடிதத்துடன் ரூ.1074/-க்கான காசேலை வரப்பெற்றுக் கொள்ளப்பட்டது.

   (1) 2007-2008ல் 12.10.2007ம் தேதியில் ரூ.3548/- மற்றும் 25.11.25ம் தேதியில் ரூ.6022/– காசோலையாக வழங்கப்பட்டுள்ளது என்றும், நிலுவைத் தொகை 2ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இருப்புத் தொகை ரூ.10,644/– உள்ளது எனக் குறிப்பிட்டதின்படி ரூ.1074/– மீதமுள்ள நிலுவைத் தொகை என வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

   (2) 2007–2008ல் 12.10.2007ம் தேதியில் ரூ.3548/– காசோலையாக எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவருக்கு வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ளது என்பது சுத்த வடிகட்டின பொய்யான தகவலாகும். என் மனைவிக்கு இத்தொகையானது (ரூ.3548/–) காசோலையாக வழங்கப்படவில்லை என்பது உறுதியான ஒன்றாகும்.

என் மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கள் 2007–2008ல் அதாவது 25.09.2007ல் கணக்கராக பழநி நகராட்சியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்துவரும் நிலையில் அவர் பணியில் இருக்கும் 12.10.2007ல் (2007–2008ல்) ரூ.3548/– இந்த நிதியாண்டு 31.03.2008 அன்று முடிவடைந்து பின்புதான் சேமநல நிதிக்கான வட்டிக் கணக்கிடும் நடைமுறையானது உள்ளபோது, முன்கூட்டியே 25.10.2007ல் எவ்வகையில் எப்படி கணக்கிட்டு காசோலையாக வழங்கமுடியும் / வழங்கி இருக்கக்கூடும். இது பொதுவானதொரு நடைமுறை என்பது கூட பழநி நகராட்சி ஆணையருக்கு அறியாத/தெரியாத நிலையில் பொய்யானதொரு தகவலையும்/ பதிவினை தந்து குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளார்.

இவ்வாறு ரூ.3548/– எனது மனைவி கி. லலிதாம்பாள் அவர்கட்கு காசோலையாக வழங்கப்பட்டது என்று கூறப்பட்டதிற்கு ஆதாரமாக

(1) காசோலை எண், வங்கி பெயர், தேதி விபரங்களையும், அதன் அடிக்கட்டை (நகலினையும்) (2) செலவினத்திற்கான E.J.V. நகலினையும் (3) Cash Book Entry (செலவினம் பதிவு) பதிவேட்டின் நகலினையும் அளிக்குமாறு 19.02.2026 நாளிட்ட கடிதம் எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்களது பெயர் முகவரி மூலம் பழநி நகராட்சி ஆணையர் திரு. R. டிட்டோ அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு அனுப்பப்பட்டது. 20.02.2026ல் பழநி நகராட்சியில் “ஆணையருக்காக” பெறப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை அளிக்கப்படவில்லை.

இதன் மூலம் ரூ.3548/– ஆனது காசோலையாக 12.10.2007ல் எனது மனைவி இந்நகராட்சியில் கணக்கராக பணியில் இருந்தபோதே சேமநல நிதிக்கான வட்டித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பது சுத்தபொய்யான தகவல்/பதிவாக உள்ளது என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

இதே கடிதம் கடைசி பத்தியில் ரூ.6022/- காசோலையாக 25.11.2025ல் வழங்கப்பட்டது என்பது உண்மையாகும்.

ஆனால் ரூ.6022/– தொகையானது (1) 1993–94 to 1998–1999 வரைக்கான முந்தைய காலத்திற்கான வட்டித் தொகை ரூ.1942/– போக மீதம் ரூ.4080/– என்பது மட்டும் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான நிதி ஆண்டுகளுக்குரியதாகும்.

இந்த தகவலானது பழநி நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண். 625/2025/பி2, நாள் 25.11.2025 மற்றும் 16.02.2026 காணும் பழநி நகராட்சி ஆணையரது 25.11.2025ம் தேதிய கடிதத்தில் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி 2007–2008ம் நிதி ஆண்டு முதல் 2010–2011ம் நிதியாண்டு வரையில் உண்மைக்கு மாறாக கணக்கிடப்பட்டுள்ளதின்படி ரூ.1000x12=12000x8.5% அடிப்படையில் ரூ.4080/– மட்டுமே ஆகும்.

இதன்படி ரூ.6022/- வழங்கப்பட்டது என்பதும் தவறானதாகும்.

இதேபோல், 16.02.2026ம் தேதியிட்ட கடிதத்தில் ரூ.10,644/- பதிவேட்டில் இருப்புத் தொகையாக உள்ளது என்பதும் பொய்யான / தவறானதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபரத்தினை 25.11.2025ம் தேதிய கடிதத்தில் பழநி நகராட்சி ஆணையர் எதுவும் தெரிவிக்காமல், 2007-2008 முதல் 2010-2011 வரையில் மாத சந்தாத் தொகை ரூ.1000/- வீதம் நான்கு நிதி ஆண்டுகளுக்கு வட்டி விகிதம் 8.5% வீதம் ரூ.4080/- வழங்கப்பட்டிருப்பதும் தவறான / குறைவான ஒன்றாகும்.

உண்மையான / சரியானபடியான எனது மனைவி கி. லலிதாம்பாள் அவர்கள் பழநி நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்த காலங்களில் (25.09.2007 to 04.03.2010 வரையிலான 2007-2008 to 2009 – 2010 நிதி ஆண்டுகளில்) பிடித்தம் செய்யப்படுள்ள சேமநல நிதிக்கான சந்தாத் தொகை விபரங்கள் அடங்கிய / வட்டி கணக்கிட்டு விபரங்கள் யாவும் தங்களது மேலான பார்வைக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது போல் பழநி நகராட்சி ஆணையருக்கும் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன.

இந்த கணக்கீட்டு (Working sheet) பட்டியலின்படி எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கட்கு கீழ்க்கண்ட விபரப்படி இன்னமும் ரூ.6525/- ஆனது சேமநல நிதிக்கான வட்டித் தொகையாக பழநி நகராட்சி நிர்வாகத்திடமிருந்து தரவேண்டியுள்ளது.

விபரம் மின்வருமாறு:-

(1) எங்களது (Working sheet) விபர கணக்கீட்டின்படி 2007-2008 முதல் 2009-2010 வரையிலான அதாவது 10/2007 முதல் 02/2010 வரையில் எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கள் பழநி நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் பிடித்தம் செய்யப்பட்டிருந்த சேமநல நிதிக்கான மாத சந்தாத் தொகை விவரங்களின்படி, பழநி நகராட்சி ஆணையரது 25.11.2025ம் தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதம் 8.5% என்ற அடிப்படையில் மொத்தம் ரூ.11,679/- ஆகும். இத்தொகையில்,

(1) பழநி நகராட்சி ஆணையரது 25.11.2025ம் தேதிய கடிதத்துடன் வரப்பெற்ற காசோலை எண். 60518, நாள் 25.11.2025ன்படி ரூ.6022/-ல் 2007-2008 to 2010–2011 என 4 நிதி ஆண்டுக்கு ரூ.4080/- மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

(2) தற்போது, பழநி நகராட்சி ஆணையரது 16.02.2026ம் தேதிய கடிதத்துடன் வரப்பெற்ற தவறான / பொய்யான கணக்கீட்டுகளின்படியானத் தொகை – ரூ.1074/- ஆகும்
(காசோலை எண். 605059 dt. 16.02.2026).

ஆக மொத்தம் – ரூ. 5154/- ஆகும்

ரூ.5154/– மட்டுமே 2007-2008 to 2009-2010ம் நிதி ஆண்டுகளுக்கு சேமநல நிதிக்கான வட்டித் தொகையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீதம் / இன்னமும் மேற்கண்ட விபரப்படி எங்களது கணக்கீட்டின்படியானத் தொகை ரூ.11679/–ல் இதுவரை பழநி நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளத் தொகை ரூ.5154/– போக மீதம் 11679 (–) 5154 = ரூ.6525/- ஆகும்.

பழநி நகராட்சி நிர்வாகம் எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கட்கு அவர் பழநி நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்த காலங்களில் சேமநல நிதிக்கான மாத சந்தாத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்டுள்ள உண்மையான விபரப்படி ரூ.6525/- இன்னமும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

மேற்கண்ட வட்டி நிலுவைத் தொகையினை (ரூ.6525/-) எனது மனைவி திருமதி கி. லலிதாம்பாள் அவர்கட்கு விரைவில் பழநி நகராட்சி நிர்வாகம் மூலம் வழங்கத்தக்க நிலையில் மேன்மைமிகு செயலாளர்/நடுவர் அவர்கள் உதவிட வேண்டி பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.''. எனத் தெரிவித்துள்ளார்.

17) எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 485/2025/பி2, நாள் 09.03.2026 –ல், தேர்தல் ஆணையத்தின் 31.10.2025 நாளிட்ட உத்தரவு கடித எண்.5000/Ele-1/2025-27ன்படி பழநி சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவரால் நடத்தப்படும் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியுள்ளதாலும், தேர்தல் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும், 2025–2026ம் ஆண்டு நிறைவு பெறும் நிலையில் 100 சதவீதம் (Target achievement) வருவாய் ஈட்டும்பொருட்டு வரி வசூல் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், 10.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. எஸ். ஜெயந்திரவேல் என்பவரை ஆஜராக அனுமதிக்க கோரியதை தொடர்ந்து, பழநி நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. எஸ். ஜெயந்திரவேல் என்பவர் 10.03.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''மனுதாரரின் கணக்குப்படி, அவரது மனைவி திருமதி லலிதாம்பாள் என்பவருக்கு சேமநல நிதிக்கான வட்டி நிலுவைத் தொகை ரூ.11,679/- வழங்க வேண்டி உள்ளது எனவும், இதில் ரூ.5,154/– ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள தொகை ரூ.6,525/– (11,679–5154) நகராட்சியால் வழங்கப்படவேண்டும் என கோரியுள்ளார்.

மேற்கண்ட மனுதாரரின் புகாரினை ஆய்வு செய்ததில், நகராட்சி கணக்குப்படி திருமதி கி. லலிதாம்பாள், க/பெ. அ. நடராஜன், கணக்கர் என்பவருக்கு சேமநல நிதி நிலுவைத் தொகைக்கான வட்டித் தொகையாக 12.10.2007 அன்று 2007–08 தொகை ரூ.3548/–ம், 25.11.2025 அன்று 2025–26 தொகை ரூ.6,022/–ம் மற்றும் 16.02.2026 அன்று 2025–26 தொகை ரூ.1,074/– என ஆக மொத்தம் ரூ.10,644/– முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரரை நேரில் அழைத்து வட்டித் தொகை கணக்கிட்டு விவரத்தினை தெரிவித்து, அதன் விவரத்தினை 15 நாட்களுக்குள் இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன் என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

18) மேற்கண்ட வாக்குமூலத்தினைத் தொடர்ந்து எதிர் மனுதாரரான பழநி நகராட்சி ஆணையர் தனது கடிதம் நக.எண்.625/2025/பி2, நாள் 24.04.2026ல் கீழ்க்காணும் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பித்துள்ளார்.

''திருமதி கி. லலிதாம்பாள், க/பெ. அ. நடராஜன், கணக்கர் (ஓய்வு) 22/30 டி, மகாலட்சுமி கோயில் தெரு, லட்சுமிபுரம், பழநி என்பவர் சேமநலநிதி வட்டி வழங்கக் கோரி மீண்டும் விண்ணப்பித்துள்ளார். இவ்வலுவலக அறிவிப்பு நாள் 23.04.2026 மூலம் மனுதாரருக்கு சேமநலநிதி வட்டி பதிவேட்டின்படி நிலுவை இல்லை என்ற விவரம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் 03.02.2026 ஆம் தேதிய உத்தரவின்படி இந்நகராட்சியில் சேமநலநிதி வட்டி வழங்க பராமரிக்கப்பட்டு வரும் பதிவேட்டின்படி ஆய்வு செய்யப்பட்டதில் உள்ள இருப்புத் தொகை ரூ.1,074/–க்கான காசோலை எண்.605059 நாள் 16.02.2026–ல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரருக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி வட்டி நிலுவை ஏதும் இல்லை. இதன் விபரம் மனுதாரருக்கு இவ்வலுவலக அறிவிப்பு நாள் 23.04.2026–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை இத்துடன் முடித்துவைக்குமாறு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

19) மனுதாரரின் புகார் மனு, கடிதங்கள், எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் கோரிக்கைகளும், நகராட்சி ஆணையரின் அறிக்கையும் பின்வருமாறு :-

**கோரிக்கை – 1**

மனுதாரருக்கு 1999-2000 முதல் 2003-2004 வரை சேமநலநிதி வட்டி தொகை ரூ.5,508/- வழங்கப்பட்டுள்ளதால், 1993-1994 முதல் 1998-1999 வரை சேமநலநிதி வட்டித் தொகை வழங்கிட கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஆணையரின் அறிக்கை**

மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டதில், நகராட்சி பராமரித்துவரும் சேமநலநிதி பதிவேடு ஆய்வு செய்யப்பட்டு சேமநல நிதி வட்டி தொகை ரூ.8,640/- வழங்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 2**

மனுதாரரின் மனைவி திருமதி கி. லலிதாம்பாள் என்பவர் பழநி நகராட்சியில் 08.06.1993 முதல் 02.11.2006 வரை உதவியாளர், வருவாய் ஆய்வர் மற்றும் 25.09.2007 முதல் 04.03.2010 வரை கணக்கராக பணிபுரிந்துள்ள தனக்கு சேமநல நிதி வட்டித் தொகையாக நகராட்சியால் வழங்கப்பட்ட தொகை ரூ. 6022/–ல் முந்தைய காலத்திற்கான (1993–94 முதல் 1998–1999) வட்டித்தொகை ரூ. 1942/– என்பதால், இதனை தவிர்த்து 2007-2008 முதல் 2010-2011 வரை நான்காண்டுகளுக்கான தொகை ரூ.4080/-ஐ கணக்கில் கொண்டு, இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்ததைத் தொடர்ந்து பெறப்பட்டத் தொகை ரூ.1074/–ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.5,154/– என கணக்கில் கொண்டு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.11,679/-ல் மேற்படி வழங்கப்பட்ட தொகை போக எஞ்சிய தொகை ரூ. 6,525/– வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஆணையரின் அறிக்கை**

நகராட்சியில் பராமரிக்கப்படும் சேமநலநிதி பதிவேடு ஆய்வு செய்யப்பட்டு மனுதாரரின் திருமதி கி. லலிதாம்பாள் (ஓய்வு) என்பவருக்கு கீழ்கண்டவாறு சேமநலநிதி வட்டித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் திருமதி கி. லலிதாம்பாள் (ஓய்வு) என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழங்கவேண்டிய தொகை | | – ரூ.10,644/- |
| வழங்கப்பட்டத் தொகை | | |
| 2007 – 08 (Voucher No.240-12.10.2007) | – ரூ. 3,548/– | |
| 2025 – 26 | | |
| IOB Cheque No. 605182, dt. 25.11.2025) (4080+1942) | – ரூ. 6,022/– | |
| IOB Cheque No. 605059, dt. 16.02.2026) | ரூ. 1,074/– | – ரூ.10,644/- |
| | மீதம் | – – |

மேலும், நகராட்சி சேமநலநிதி பதிவேட்டின்படி வழங்கப்பட வேண்டிய தொகை முழுவதுமாக வழங்கப்பட்டுவிட்டது.

இந்நேர்வில்;

(i) மனுதாரருக்கான சேமநலநிதி வட்டித் தொகை ரூ.8,640/– முழுமையாக வழங்கப்பட்டதால், மனுதாரர் முழு திருப்தி அடைந்துள்ளதாக இம்முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளதால், கோரிக்கை–1ன் மீதான நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

(II) மனுதாரரின் மனைவி திருமதி. லலிதாம்பாள் என்பவருக்கான கேட்பு நேர்வில், பழநி நகராட்சியில் உள்ள சேமநலநிதி பதிவேட்டை ஆய்வு செய்ததில் திருமதி லலிதாம்பாள் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.10,644/– அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பழநி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் மனைவி திருமதி. லலிதாம்பாள் என்பவருக்கு ரூ.3,548/– (Voucher No.240, 12.10.2007) வழங்கப்பட்டதற்கான ஆதார ஆவணத்தை மனுதாரருக்கு வழங்குமாறு பழநி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1 திரு. அ. நடராஜன்,
எண்.22/230டி, மகாலட்சுமி கோவில் தெரு,
லட்சுமிபுரம், பழநி– 624601,
திண்டுக்கல் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
பழநி நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032